REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE :

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை : ஐப்பசி 16உ திங்கள் (1—11—54) ★ ★ வெளியூர் : ஐப்பசி 17உ செவ்வாய் (2—11—54) [இதழ் 120

காஞ்சிக்கு குடி தண்ணீர் வச...

★

காஞ்சி நகரசபையினர், நகரத்தின் குடிதண்ணீர் வசதிக்காக பாலாற்றில் தோண்டிவரும் கிணற்றுக்கு சென்னை மந்திரி கனம் ராமசாமி (படையாச்சி) அஸ்திவாரக்கல் நாட்டினர்.

காஞ்சி நகரத்திற்குக் குழாய் மூலம் தண்ணீர் வசதி செய்து தருவதற்கான ஏற்பாடு இது.

பாலாற்றில் சுமார் ஒரு அடி உயரம் தண்ணீர் ஓடுகிறது. அதில் 2 பர்லாங் தூரம் நடந்து சென்று, 'தேங்காய் உடைத்து, சடங்குகள் நடத்தி' கிணற்றுக்கு அஸ்திவாரக்கல் நாட்டியிருக்கிறார்.

புதிய வாழ்வல்ல; புதிய நிலைதான்!

விடுதலைப் போரில் ஒரு கட்டம் முடிந்தது—இரண்டாம் கட்டம் தொடங்குகிறது!

பழைய எஜமான் கப்பலேறினன்!

புதிய ஆதிக்கம் குடிபுகுகிறது!

பிரெஞ்சிந்தியா 'சி' பிரிவு மாநிலமாகப் பிரிக்கப்படுவதேன்?

இன்றோடு, இருநூற்றைம்பது ஆண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தின் சில திட்டுகளில் கொட்டமடித்துக் கொண்டிருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியம், வேறு வழி காணாத நிலையில், அத்திட்டுகளை விட்டு வெளியேறுகிறது.

ஏகாதிபத்தியம் கரைகிறது; அதன் ஏற்றம் தரைமட்டமாகிறது!

இந்தியத் துணைக்கண்டத்தின் கறை படிந்த வரலாறு கழுவப்படுகிறது; புதிய வரலாறு தொடங்கப்படுகிறது!

இவ்வரலாறு, வெறும் கறுப்பு மையைத் தொட்டு, பேனமுனையினுல் தீட்டப் படுவதல்ல; நெஞ்சுரம் கொண்ட உரிமை வேட்கையினர், அடக்குமுறை களத்தில் கொட்டிய குருதியில், தன்னல மறுத்தல் எனும் பேனவை இட்டு, சிவப்பு நிறத்தில் தீட்டப்படும் வீர வரலாறு ஆகும்!

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற, விரண்டோடச் செய்ய, அரசியல் கட்சி பேதம்—கொள்கை முரண்பாடு கருதாமல், பொது வாழ்வினர் அனைவரும், தங்கள் தங்கள் கடமையைச் செய்துள்ளனர்.

உயிர் கொடுத்தோர் உண்டு; அங்கங்களைப் படையல் போட்டோர் உண்டு; வெஞ்சிறையில் வதையுண்டோர் உண்டு; சொந்த வீட்டை விட்டு ஓடி நாடோடிபோல் நலிந்தவர் உண்டு; முதுமை பெற்றோர், கொஞ்சும் கட்டழகி, குழலைத் தோற்கடிக்கும் மழலை கூறும் நற்குழவிகள்—ஆகியோருடனிருந்து அகமகிழும் வாழ்வைத் துறந்து, சட்டிப் பரதேசிகளாக தலைமறைவாக சஞ்சரித்து, ஏகாதிபத்தியத்துடன் போர் தொடுத்தோர் பல்லோர்!

வென்றது அவர்கள் தியாகம்—வீண் போகவில்லை! வாழ்க அவர் செயல்! வாழ்க அவர் நாமம்!

அவர்கள் வீரச் செயலால், ஏகாதிபத்தியம், ஞாயிறுபட்ட பனி போல் ஆவியாக மறைந்தது! இனி என்றென்றும் அந்தப் பனி, நமது கடற்கரைப் பகுதியில் படியாது—முக்காலும் நிச்சயம்!

'பிரெஞ்சிந்தியா' என்ற அவமானப் பெயர், திராவிட இனத்தை விட்டுத் தொலைந்தே விட்டது! மகிழ்கிறோம்!

முன்னுள் எஜமான் கப்பலேறி விட்டான்! அவன் விட்டுச் சென்ற வீட்டில் புதிய ஆதிக்கபுரியினர் குடி வருகின்றனர்!

முன்னைய சம்பவம் மகிழ்ச்சிக்குரியது! பின்னைய நிகழ்ச்சி புதிய சிந்தனைக்குரியது!

புதுவை—காரைக்கால், மாகி, ஏனும் ஆகிய தாய் ஊர்களும், முறையே தமிழ் நாட்டுடனும், கேரளத்துடனும், ஆந்திராவுடனும் இணைக்கப்பட வேண்டும். அங்குள்ள மாநில ஆட்சியின் நேரடி தொடர்புக்குள், மேற்படி ஊர்கள் உள்ளாக்கப்பட்டு இருக்க வேண்டும்!

அதுதான் முறை—நியாயம்—முன்னுள் பிரெஞ்சிந்திய மக்கள் எதிர்பார்த்ததும்!

நிலைமை அவ்வாறு இல்லை! இந்தியப் பேரரசின் நேரடி ஆட்சிக்கு 'பிரெஞ்சிந்தியா' இரையாக்கப்பட்டு இருக்கிறது! 'சி' பிரிவு மாநில அந்தஸ்து எனவும் பேசப்படுகிறது!

இந்த முடிவுக்கு அங்குள்ள மக்களின் ஒப்புதல் பெறப்பட்டதா? நமக்குத் தெரிந்தவரையில் இல்லை!

ஏகாதிபத்தியம்—ஆதிக்கபுரி, இரண்டும் ஒரே குரல் கொண்டு பேசும் பண்புகொண்டது!

பிரெஞ்சிந்திய மக்கள் உரிமைப் போராட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது! இனி இரண்டாம் கட்டம் தொடங்குகிறது! இதிலும் மக்கள் வெற்றி பெறுவர் என்பது நிச்சயம்—ஆனல் மேலும் சில ஆண்டு செல்லும்!

பிரெஞ்சிந்திய மக்கள் இப்பொழுது பெற்றிருப்பது, அரசிய...

(4-ம் பக்கம் பார்க்க)

மேற்கு பாகிஸ்தான் மாநிலங்கள்

ஒன்ருக இணைக்க முயற்சி!

கராச்சி, அக். 29—

மேற்கு பாகிஸ்தானிலுள்ள எல்லா மாநிலங்களையும் ஒரே நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டு வருவது பற்றி பாகிஸ்தான் புதிய மந்திரி சபை தீவிரமாக ஆலோசித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க வேண்டிய அளவுக்கு தலை தூக்கி நின்ற மாகாண வெறியை, இந்தப் புதிய நிர்வாக அமைப்பு ஒழிக்கும் என நம்பப்படுகிறதாம்.

அடுத்த சில நாட்களில் இது பற்றி ஒரு முடிவேற்படலாம் எனத் தெரிகிறது.

இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டால், பாகிஸ்தான், மேற்கில் ஒன்று - கிழக்கில் ஒன்ருக இரண்டு தனித்தனி சுதந்திர மாநிலங்களாக அமைந்து விடும்.

பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயச் செலாவணி, செய்திப் போக்குவரத்து முதலியவற்றிற்கான அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திடமே யிருக்கும்.

பிரெஞ்சிந்தியப் பகுதிகள்

அதிகார மாற்றத்திற்குப் பின் நிலைமை!

புதுடில்லி, நவ. 1—

இன்று இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்ட பிரெஞ்சிந்தியப் பகுதிகளில், நாணயச் செலாவணி, சுங்க வரி, கலால் வரி, ஏற்றுமதி—இறக்குமதிக் கட்டுப்பாடுகள், நாணய மாற்றுக் கட்டுப்பாடு போன்ற இந்திய பொருளாதாரச் சட்டங்களைப் புகுத்த இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது.

இந்தச் சட்டங்களின் கீழ், இந்திய யூனியன் சர்க்காரில் அமுலிலிருந்து வரும் அறிவிப்புகள், விதிகள், உத்திரவுகள் ஆகியவை பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் அனுசரிக்கப்படுவதோடு, நவம்பர் திங்கள் 1-ந் தேதிக்கு முன் அப்பிரதேசங்களில் அமுலிலிருந்து வந்த இதுபோன்ற பிரெஞ்சிந்திய சட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

இனிமேல், ஏற்கனவே உத்திரவு செய்யப்பட்ட தேதி அல்லது கப்பலேற்றும் தேதி எதுவாயிருந்தாலும், பிரெஞ்சிந்திய இறக்குமதிகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும் இந்திய விகிதங்களின்படியே வரி விதிக்கப்படும்.

மேலும், பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பருத்தித் துணிகள், தாவரப் பண்டங்கள், தீப்பெட்டிகள் போன்றவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் 'எக்ஸைஸ்' வரி விகிதப்படிதான் வரி விதிக்கப்படும்.

இந்திய ரிசர்வ் பாங்கி வெளியிடும் நாணயங்களும், 'கரன்சி' நோட்டுகளும், பாங்கி நோட்டுகளும்தான் இனி அப்பகுதிகளில் செல்லுபடியாகும். தற்போது அங்குள்ள பிரெஞ்சிந்தியக் 'கரன்சி' நோட்டுகள், 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ந் தேதிக்கு மேல் செல்லுபடியாகாது.

இனிமேல், பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் தங்கம், வெள்ளி இறக்குமதி செய்வது தடைசெய்யப்படும். அதுபோலவே, பிரெஞ்சிந்தியப் பகுதிகளைச் சுற்றியுள்ள நிலச் சுங்க வளையம் நீடிக்கும் வரை, பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலிருந்தும், இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்குத் தங்கம் வெள்ளி ஏற்றுமதி செய்வதும் அனுமதிக்கப்படாது.

மேலும், பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலிருக்கும் பாங்கிகளும், கம்பெனிகளும் இந்தியாவிலுள்ள இதர பாங்கிகளுக்கும், கம்பெனிகளுக்கும் சமமாகக் கருதப்படும். இதற்கு வழி செய்யும் முறையில், பாங்கி, கம்பெனிகள் சட்டமும், இந்திய கம்பெனிகள் சட்டமும் பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட இருக்கின்றன.

சந்திரநாகூர் கல்வி முறை

மக்கள் கோரிக்கைக்கு சர்க்கார் இணைக்கம்!

சந்திரநாகூரிலுள்ள உயர்நிலைக் கல்வி நிலையங்களின் பொறுப்பை சந்திரநாகூர் நகர சபையிடம் ஒப்படைக்க மேற்கு வங்க சர்க்கார் செய்த முடிவை சந்திரநாகூர் மக்களில் சில பிரிவினர் எதிர்க்கின்றனர்.

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

காங்கிரஸ் தலைவரை சுட்டுக் கொல்ல முயற்சி

சொந்தப் பகையா? அரசியல் வேற்றுமையா?

பொள்ளாச்சி தாலுகா காங்கிரஸ் கமிட்டித் துணைத் தலைவர் சின்னுசாமி கவுண்டரை, இரு நபர்கள் சுட்டுக் கொல்ல முயற்சித்தனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

சின்னுசாமி கவுண்டர் சிங்காரம் பாளையம் எனும் ஊரைச் சேர்ந்தவர் என்றும், அவர் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் தமது கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டதாகவும், தமது வாகனத்தை மீண்டும் வேகமாக ஓட்டிச்சென்றதன் காரணமாக, அவர் துப்பாக்கிக்குண்டுக்குத் தப்பினர் என்றும் கூறப்படுகிறது.

மேலும், தம்மைத் தாக்கவந்த எதிரி 'டிச்சில்' விழுந்துவிட்ட தருணத்தில் அவரைத் தாவிப் பிடிக்க சின்னுசாமி கவுண்டர் முயற்சிக்கையில், அவருக்குப்பின்னலிருந்து கொண்டு இன்னுமொருவர், சுட்டதாகவும் அந்தக் குண்டுக்கும் அவர் தப்பிக்கொண்டார் என்றும் தெரிகிறது.

இரு எதிரிகளிடமிருந்தும் உயிர் தப்பிப் பிழைத்த மேற்படியார் கிணத்துக்கடவு போலீஸ் ஸ்டேஷனில் இதுபற்றிப் புகார் ஒன்று கொடுத்திருக்கிறார். போலீஸ் புலன் விசாரணை நடைபெற்றுவருகிறது. இந்தச் சம்பவம் கிணத்துக்கடவு சுற்றுவட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியுள்ளதாம்.

சந்திரநாகூர்...

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

அவர்களின் எதிர்ப்பை அனுதாபத்துடன் கவனித்து, மே. வங்க அரசாங்கம், சந்திரநாகூரில் அமுல் நடத்தப்படும் உயர்நிலைக் கல்வி முறையிலும், ஆசிரியர்கள், சிப்பந்திகள் ஆகியோரின் பொறுப்புகளிலும் மாறுதல் செய்து, அவர்களுக்குத் தொல்லை எதும் தராமல் இருக்க சட்டமியற்ற விரும்புகிறது என்று தெரிகிறது.

இதற்கான விதிகள், மேற்கு வங்க சட்ட சபையில் கொண்டுவரப்பட இருக்கும். சந்திரநாகூர், நகர சபை முனிசிபாலிடி சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

இப்போது அமைக்கப்படும் சந்திரநாகூர் நகர சபை நிர்வாகத்தில் ஆண்டுதோறும் ரூ. 3 லட்சம் துண்டுவிழும் என்றும், இதை மேற்கு வங்க சர்க்காரின் மானியங்கள் மூலமே ஈடுகட்ட முடியுமென்றும் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 1—11—1954 திங்கள்.

போகுமா, கோத்திரத்தின் குணம்?

சென்னை மாநில முதலமைச்சர் பதவியிலிருந்து சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் விரட்டியடிக்கப்பட்டதிலிருந்து, அவரால், இனி நாட்டு மக்களுக்கு எந்தவிதத் தொல்லையும் ஏற்படாது என நாம் மனப்பூர்வமாக நம்பி இருந்தோம். அதுவுமன்றி, அவரைக் குறித்து மனத்தாலும் தீண்ட வேண்டிய கட்டாயம் நமக்கு இனி ஏற்படாது எனவும் முடிவு கட்டி இருந்தோம். ஆனால், அந்த முடிவை மாற்றிக்கொண்டு, அவர் சலசலப்பைக் குறித்து ஆராய வேண்டிய கட்டாய நிலைக்கு, அவர் நம்மைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்.

அவரிடத்திலிருந்து முதல் மந்திரி பதவி பறிமுதல் செய்யப்பட்டுவிட்டவுடன், வழக்கமாகச் செய்துவந்த இராமாயண காலட்சேபத்தின் வேகத்தை, முன்னிலும் கூடுதலாக அவர் தீவிரப்படுத்தினார். அது ஆரிய கோத்திர குணம் என்பதை விளக்கமாகத் தெரிந்திருந்ததால், அதை நாம் ஒரு பொருட்டாக மதிக்காது இருந்துவிட்டோம். அதை நம்பியே தங்கள் வயிற்றை நிரப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிற எத்தனையோ அடிகளும் தடிகளும், இராம காதையைக் கட்டி அழும்பொழுது, இராம பக்தியில் தம் இனத்தின் வாழ்வும் தாழ்வும் இணைந்திருக்கிறது என்ற உண்மையைத் தெரிந்த ஒரு ஆரிய சிகாமணி, அதன் ஆதிக்கப் பிடி தளராமல் இருக்க முயற்சித்துவருவதில், நமக்கு அதிருப்தியும் பிறக்கவில்லை; ஆச்சரியமும் ஏற்படவில்லை! அவர் ஆசையும் தீர்ந்துவிடட்டுமென்றே வாளாவிருந்துவிட்டோம்.

ஜெயின மத ஸ்தாபகரான மகாவீரர் பிறந்தநாள் விழாவை சென்னையிலுள்ள மார்வாரிகள் கொண்டாடியிருக்கின்றனர். இந்த ஆண்டில் அந்த விழா தீபாவளி தினத்தன்று வந்திருக்கிறது. அதில் கலந்துகொண்ட ஆச்சாரியார், இங்கு காணப்பெறும் மதங்களையெல்லாம் பல மலர்களுக்கு ஒப்பிட்டு, அந்த மலர்களைக் கொண்ட இந்த நாட்டை ஒரு பூங்காவிற்குப் ஒப்பிட்டுப் பேசியுள்ளார். அவர் கூறிய உவமை, நாம் காணும் பிரத்தியட்ச நிலைமையைப் பிரதிபலித்திருக்கிறதா என்றால், இல்லையென்றே ஒரே வார்த்தையில் முடித்துவிடலாம். நங்கையர்கள் விரும்பிச் சூடாத மலர்களும் உண்டு. அத்தகைய மலர்கள் ஒரு சிறந்த பூங்காவில் இடம் பெற்றிருப்பதும் கிடையாது.

மக்கள் உவந்து ஏற்கும் மலர்கள் சில, அந்த மலர்களை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் ஒரே வகையான மணத்தைக் கொடுத்து மகிழ்விக்கிறது. ஆனால், இந்து மத மலரோ, அனுமதேயப் பிறவி என்பதோடு மட்டுமல்லாமல், அதைச் சூடிக்கொள்பவர்களிடம், பிறப்பினாலேயே உயர்வு தாழ்வு பேதம் கற்பிக்கிறது. அதுவுமல்லாமல், அந்த மலரை நீண்டகாலமாகப் பெற்றிருப்பவர்களை, தீண்டப்படாதவர், தொடப்படாதவர், பார்க்கப்படாதவர் என்றெல்லாம் அவமானப்படுத்தியும் வைத்திருக்கிறது. அந்த மலர், மற்ற மலர்களைப்போல் உருவத்திலும், நிறத்திலும் ஒத்திருந்தாலும், குணத்திலும் மணத்திலும் நச்சுத்தன்மை நிரம்பியதாக இருக்கிறது.

அந்த மலரை வேறு கதி காணாத நிலையில் ஏற்றுக்கொண்டு இருந்தவர்கள், வேறு சமத்துவ நூதன மலர் பூங்காவில் புதுமுகங் காட்டியவுடன், அதுநாள்வரை கட்டி அழுதுக் கொண்டிருந்த விஷப் பூவை பிய்த்தெறிந்துவிட்டு, நூதன மலரை விருப்புடன் சூடத் தொடங்கினர். அந்தத் தொடக்கம், பூங்காவையே துண்டாடிவிடுவதில் வந்து முடிந்தது!

பூங்காவைத் துண்டாடுவதற்கு, ஆச்சாரியார் கூட காற்று வேகப் பிரசாரம் செய்திருக்கிறார். ஆனால், அதே ஆச்சாரியார்தான், முன்னாள் தாம் மேற்கொண்ட செயலை மறந்தவர்போல், துண்டாடப்பட்ட மலர், வனத்தில் காணப்பெறும் மலர்களின் குணச் சிறப்புகளைக் குறித்து கொக்கரிக்கிறார். போனது போகட்டும்; எஞ்சியதாவது நிலைக்கட்டும்; அதுவும் இரு துண்டுகளாகிவிடாமல் கூடுமானவரை பாதுகாப்போம் என்ற நப்பாசையால்தான் ஆச்சாரியார், மேற்குறித்ததுபோல் அங்கலாய்க்கிறார் என்ற உண்மையை, நாம் அறிந்திருப்பதுபோன்றே, மற்றவர்களும் அறிந்தே இருக்கிறார்கள்.

வேலிக்கு இட்ட முள் காலில் தைத்தால், தைத்த முள்ளை மட்டும் அகற்றிவிடுகின்ற நிலையோடு, வதைபடுபவர் நெஞ்சம் சாந்தியடையாது. வேலியில் உள்ள முள் அனைத்தையுமே, ஆம், பல் உள்ளவரை அழித்தொழிக்க வேண்டும் என்ற நினைப்புத்தான் அனைவருக்கும் உண்டாகும். அதிலும் வேலியும் முள், முள்வேலிக்குள் இருக்கும் பூங்காவும் கள்ளி முள்ளி காளான் நிரம்பிய தோட்டம் என்று ஏற்பட்டுவிட்டால், அந்தத் தோட்டத்தை தீயிட்டுச் சாம்பலாக்கத்தான், மக்கள் முன்னேற்றத்தில் நல்லெண்ணம் கொண்டிருப்பவர் முனைவர். அந்த முயற்சியை, நறுமண மலர்வனம் எனும் பிரத்தியட்ச உண்மைக்கு முரணாக உள்ள கற்பனையைக் காட்டி, ஆச்சாரியார் மாய்த்துவிட நினைப்பது, ஆதிக்க வெறியால் அவர் அறிவிழந்து பிதற்றுகிறார் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

அந்த மலர்களில் எந்த மலருமே தங்களுக்கு வேண்டாமென்று சொல்லுகிறவர்களும், இங்கு இருக்கத்தான் செய்கிறார்களாம். அவர்கள் இப்பகுதியைவிட்டுவெளியேற்றிவிட வேண்டும் என்றும் ஆச்சாரியார் அலமருகிறார். அத்துடனும் நின்றுவிடவில்லை அந்த சாணக்கியர். மத நம்பிக்கையற்றவர்களுக்கு தென்னாட்டில் இடமில்லை எனவும் எக்காளமிடுகிறார் — இல்லை —பல்லிளிக்கிறார்.

மந்திக்குக் கோபம் வந்தால், தன் இரு பல் வரிசைகளையும் நெருக்கி, பற்களை மூடிக்கிடக்கும் மேல் - கீழ் உதடுகளை உயர்த்தியும், தாழ்த்தியும், கழுத்தை நீட்டி, முகத்தை முன்தள்ளி, கோபமூட்டிய குரங்கை அச்சுறுத்துவதை நம்மில் பலர் பார்த்திருக்கக் கூடும். மத நம்பிக்கையற்றவர்களை வெளியேற்றிவிட வேண்டும் என்ற இறுதி எச்சரிக்கையை ஆச்சாரியார் அறிவித்த நேரத்தில், மேற்கூறிய மந்தியின் திருக்கோலத்தில் இருந்திருந்தாலும் இருக்கக்கூடும்.

ஆயுதபாணியாக, அதிகார ஆணவத்தோடு மிகக் கம்பீரமாக வீற்றிருந்த திருக்கோலத்தைக் கண்டே அஞ்சாத திராவிட இனம், ஆத்திரம்கொண்ட மந்தியின் திருக்கோலத்தைக் கண்டா அஞ்சிவிடப் போகிறது? எனவே, ஆச்சாரியார், அச்சுறுத்தும் வேலையை இனியாவது விட்டுவிட வேண்டுகிறோம்!

வடக்கே இருந்த மார்வாரிகள இங்கேவந்து 'கூடி' இருப்பது கண்ணுக்குக்'கவர்ச்சியாக இருக்கிறது என்கிறார் ஆச்சாரியார். இப்படிப் பல இனத்தவர் கூடி இருப்பதுதான் வரவேற்கத்தக்கது என்னவும் அந்த மாம்பலத்தார் இறும்பூதெய்துகிறார்!

கண்ணகியிடத்தில் உள்ள கவின்பெரும் வனப்பைக் காண ஆச்சாரியார் மறுக்கிறார். மாதவியின் மனையில்தான் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது என ஆச்சாரியார் அர்ச்சிக்கிறார். வெறும் அரசியல் விபசாரம்!

திராவிடத்திற்கு எதற்காக மார்வாடிகள் வந்திருக்கிறார்கள் என்பதையும், வந்து என்ன செய்கிறார்கள் என்பதையும், ஆச்சாரியார், தாம் கனமாக இருந்தபொழுதே ஒருமுறை சுட்டிக் காட்டி இருக்கிறார். அதை மறந்தவர் போல், 'இங்கு நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை இங்கேயே செலவழிக்க வேண்டும். இல்லையானால், நீங்கள் உங்கள் (வடக்கு) நாட்டுக்கு அனுப்பிவிடுகிறீர்களோ என மக்கள் சந்தேகிப்பர்' என்று, உண்மை நிலையை சந்தேகம் எனப் பெயர் கொடுத்து, அந்தச் சந்தேகத்தையும் மற்றவர்கள் தலை மீது சுமத்தி, ஆச்சாரியார் மார்வாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மார்வாரிகள் இங்கு வந்திருப்பது கண்ணுக்கு விருந்தாக இருக்கிறது எனப் பெருமைப்பட்டுக் கொண்ட அதே ஆச்சாரியார், அவர்கள் இங்கு வந்திருப்பது பணத்தை சுரண்டிச் செல்லத்தான் என்பதையும் இலைமறை காயென இயம்பியுள்ளார். வடக்கு - தெற்கு என்ற இயற்கை பேதத்தையும் ஆச்சாரியாரால் மறைக்க முடியவில்லை; அதையும் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

அவர் கூறிய பல மலர் நிறைந்த இந்திய மலர்வனம் வடக்கு—தெற்கு எனும் பகுதிகளைக் கொண்டதாகத்தான் இருக்கிறது. அவரே அறிந்து கூறும் ஒன்றைக் குறித்து, மற்றவர்கள் பேசினால் மட்டும் ஏனோ, ஆச்சாரியாருக்கு அதிருப்தியும் ஆத்திரமும் ஏற்பட்டு விடுகிறது? நிற்க,

மதமற்றவர்களை 'எல்லாம் தென்னாட்டை விட்டே வெளியேற்றிவிட வேண்டும் என்று ஆச்சாரியார் அக்கூட்டத்தில் கொக்கரித்து இருக்கிறார். அவருக்கு அந்த ஆற்றல் கிடையாது என்பதை அனைவரும் அறிவர். எனவே, அது பற்றி அவ்வளவாக நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை.

ஏதாவது ஒரு உதவியை நாடி ஒருவரிடம் ஒருவர் சென்றால், உதவி செய்பவரை நேருக்கு நேராகப் புகழ்ந்தும், அவருக்குப் பகைவர்களாக உள்ளவர்களை அவர்களுக்கு முன்பாக இகழ்ந்தும், பிதற்றினால்தான், உதவிகோருபவர் எண்ணம் வெற்றிகரமாக ஈடேறும் என்ற உண்மையை முதியவரான ஆச்சாரியார் அறிந்தே இருக்கிறார். எனவே, காந்தி மண்டபத்திற்கு நிதி கேட்கப் போன ஆச்சாரியார், அதே தந்திரத்தை, கோத்திர குணத்திற்கொப்ப கையாண்டு இருக்கிறார். எதிர்பார்த்தபடியே அவர் தந்திரம் வெற்றியும் கொடுத்திருக்கிறது. இதில் நமக்கு அழுக்காறும் இல்லை— ஆத்திரமும் கிடையாது! 'போகுமா, கோத்திரத்தின் குணம்?' என்று கேட்பதோடு நிற்போம்!

லண்டனிலிருந்து கராச்சி வர...

பாக். பிரதமர் செய்த செலவு!

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, கடந்த வாரம் அமெரிக்காவிலிருந்து அவசர அவசரமாக காராச்சி வந்தாரல்லவா? வரும்போது லண்டனிலிருந்து கராசசி வந்துசேர அவர் செலவு செய்தது எவ்வளவு தெரியுமா?

ரூ. 50,000 தரவேண்டுமாம், பி. ஓ. ஏ. சி. கான்ஸ்டலேஷன் விமானத்திற்கு!

முதலில் இங்கிலாந்து விமானப் படையைச் சேர்ந்த விமானமொன்றில் பிரயாணம் செய்வதாகக் கூறி, நெடுநேரம் அந்த விமானத்தை லண்டன் விமான நிலையத்தில் காக்க வைத்துவிட்டு பின், இந்த விமானம் எனது குழு முழுவதற்கும் போதுமானதல்ல—சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்கு," என்று கூறிவிட்டு, பி. ஓ. ஏ. சி. கான்ஸ்டலேஷன் விமானமொன்றில் பிரயாணம் செய்திருக்கிறார்.

அந்த கான்ஸ்டலேஷன் விமானத்தில் 60 பேர் பயணம் செய்யலாம்; ஆனால், முகமதலி கூட இருந்தவர்களோ 19 பேர்கள்தான்; இந்த 19 பேர்களுக்காக பாகிஸ்தான் அரசாங்கத்திலிருந்து ரூ. 50,000 தந்திருக்கிறார் முகமது அலி!

கவர்னர் முன்ஷியின் உத்திரவை நீதிமன்றம் ரத்து செய்தது!

அலகாபாத் பல்கலைக் கழகப் பேராசிரியர் வழக்கில் தீர்ப்பு!

அலகாபாத் பல்கலைக் கழகத்தில், அரசியல் துறைத் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் ஈஸ்வரி பிரசாத் சென்ற மார்ச் திங்கள் 13-ந் தேதியன்று தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர், பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் ஒரு உறுப்பினர் ஆவார். பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் மேற்படி உறுப்பினர் பதவியிலிருந்து டாக்டர் ஈஸ்வரி பிரசாதை நீக்கி பல்கலைக் கழக வேந்தரும் உ. பி. கவர்னருமான கே. எம் முன்ஷி உத்திரவிட்டார் என்றும், இந்த உத்திரவு செல்லத்தக்கதல்ல என்றும், கவர்னரின் உத்திரவை ரத்து செய்யக் கோரியும் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் டாக்டர் ஈஸ்வரி பிரசாத் வழக்கு தொடுத்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி மூதம் மனுவை அனுமதித்து அலகாபாத் பல்கலைக் கழக சட்டம் 42-வது பிரிவின்படி கவர்னரின் உத்திரவை ரத்து செய்து தீர்ப்பளித்தார்.

3 நாட்கள் தொடர்ந்து பேச முயற்சி!

ஐரிஷ் இளைஞரின் நாக்கு வீங்கியது-பேச்சு தொடர்கிறது!

இடைவிடாது பேசி, உலகில் தனி 'ரிகார்டு' ஒன்றை ஏற்படுத்த ஐரிஷ் இளைஞர் ஒருவர் முன்வந்திருக்கிறார்.

அவருக்கு 25 வயதாகிறது என்றும், இவர் 127 மணி நேரம் இடைவிடாது பேச முயற்சிக்கிறார் என்றும் தெரிகிறது.

கடந்த இங்கட்கிழமையன்று காலை 11 மணிக்கு அவர் தனது நீண்ட சொற்பொழிவை ஆரம்பித்தார். தனது முடிவின்படி சனிக்கிழமை காலை 6 மணி வரையில் பேசவேண்டி யிருக்கிறது. இப்போது 72 மணி நேரம் ஆகிவிட்டது என்றும், ஆனால் இவரது நாக்கு நன்றாக வீங்கியுள்ளது என்றும், பேச்சு பட்டுநிற்கவில்லை என்றும் தெரிகிறது.

தமது தொண்டை வீங்கியிருப்பதைத் தவிர்க்க அவர் மாத்திரைகள் உட்கொண்டாராம். மூன்று நாட்களாக அவர் உணவு கொள்ளாது, உறக்கமின்றி இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

சிறிதளவு ஆரஞ்சுப் பழ ரசத்தையும் குளுகோசையும் அவர் உட்கொண்டார் என்று தெரிகிறது.

தனி அறை ஒன்றில் வேறு பொருள்கள் எதும் இல்லாத நிலையில் உலவிக்கொண்டே பேசிக் கொண்டிருக்கிறாராம்!

மாவட்ட கழகத் தேர்தல்

இறுதி முடிவுகள்

சென்னை மாநிலத்திலுள்ள 13 மாவட்டங்களுக்கு நடைபெற்ற மாவட்ட கழகத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 77·7 சத விகித இடங்களைப் பிடித்துக்கொண்டதாகத் தெரிகிறது.

எல்லா மாவட்டங்களிலும் மொத்தமாக உள்ள 628 இடங்களில் 488 இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

மிகுதியுள்ள இடங்கள் 87சுயேச்சைகள், 29 கம்யூனிஸ்டுகள், 11 - பி.-சோ. கட்சி, 3 முஸ்லிம் லீக், 2 உழவர் கட்சி—இப்படிப் பிரித்துக்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

பழி வாங்கும் படலம் ஆரம்பம்!

ரொடீஷியா நியூசிலாந்து கவர்னர், தென்ஆப்பிரிக்கச் சுதேசிகளின்மீது பழி வாங்க ஆரம்பித்துவிட்டிருக்கிறார். அங்கேயுள்ள தென்ஆப்பிரிக்கர்கள் 'விரும்பத்தகாதவர்கள்' என்று இனிமேல் கருதப்படுவார்களாம்!

அமுலுக்கு வரவிருக்கும் 'சமஷ்டி குடியேற்றச் சட்டத்'தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"பொருளாதாரம், அல்லது பழக்க வழக்கம் காரணமாக ஒரு குறிப்பிட்ட சாராரை 'விரும்பத்தகாதவர்' என்று கவர்னர் பிரகடனம் செய்யலாம்; மேலும் 'விரும்பத்தகாதவர்களை அவர் கைது செய்யலாம்' என்று அந்தச் சட்டம் கவர்னருக்கு விசேட அதிகாரம் அளிக்கிறது.

சமுதாய நலத் திட்டங்கள்!

அதிகாரிகள் மக்களுடன் ஒத்துழைக்க யோசனை!

மைசூர், அக். 28—

சமுதாய நலத் திட்டங்கள் அமுலில் இருக்கும் பகுதிகளில், அபிவிருத்தி காண்பதற்கு மிகவும் கால தாமதமாகிறது; எதிர்பார்த்த அளவு வேகமாக அபிவிருத்தி ஏற்படவில்லை என்பதைக் காண வருந்துகிறேன்,'' என்று, காந்தி கிராம நிர்வாகியான திரு. ஜி. ராமச்சந்திரன் அவர்கள், எல்லா மாநில சமுதாய நலத் திட்ட அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய மாநாடொன்றின் இறுதிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"விவசாயமும் சிறு தொழில்களும் வளர்ச்சியடைவதில் அதிகாரிகள் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும்,'' என்று அவர் கூறினர்.

சமுதாய நலத் திட்ட நிர்வாகியான எச். கே. டே என்பவர் கூறியதாவது:—

"மக்களை அதிகாரம் செய்வது, அவர்களுக்கு உத்தரவிடுவது போன்ற பழக்கங்களை அதிகாரிகள் கைவிடவேண்டும்; அவர்கள், ஒற்றுமையுடன் மக்களிடையே ஒத்துழைக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும்,'' என்ருர்.

மணப்பெண்கள் தேவையாம்!

40,000 இளைஞர்களுக்கு மணமாகவில்லையாம்!

நியூசிலாந்து இளைஞர்களின் ஒழுக்க ஆய்வுக் குழுவின் தலைவரான டாக்டர் ஓ. என். மாசென் கார்ப் என்பவர், "வடமேற்கு ஐரோப்பாவும், பிரிட்டனும், ஏராளமான நல்லொழுக்கமும், குடும்பப் பற்றும் உடைய பெண்களை நியூசிலாந்திற்கு அனுப்பித் தர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருக்கிருர்.

"இந்தப் பெண்கள், 'கடவுளின் கருணை'யால், இங்குள்ள 40,000 இளைஞர்களை மணந்து கொண்டு இல்லறம் நடத்தவேண்டும்; இல்லாவிடில், மணமாகாது இப்போதுள்ள இந்த நாற்பதாயிரம் இளைஞர்களும், மணம் செய்து கொள்வதற்கும் பல ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கும்; எனவே, 30 வயதுக் குட்பட்ட பெண்கள், நியூசிலாந்தில் ஏராளமாகத் தேவைப்படுகிருர்கள்; இங்குள்ள இளைஞர்களுக்கு 50 சதவிகிதம்தான் வாழ்க்கைத் துணை தேடிக்கொள்ள சந்தர்ப்பம் இருக்கிறது,'' என்றும் அந்த டாக்டர் கூறியுள்ளாராம்!

இலங்கையில் எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை!

ஷெல் கம்பெனியார் அமைப்பார்கள்!

இலங்கையில் தொழில் நடத்தும் எண்ணெய் கம்பெனியான ஷெல் கம்பெனியார், இலங்கையில் எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ஒப்புக்கொண்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது.

கொழும்பு நகரைச் சுற்றி 20 மைல் சுற்றளவில், தகுந்த இடம் ஒன்றை அவர்கள் தேடுகிருர்கள் என்றும், 'ஹெந்தாலா' என்னுமிடம், எண்ணெய் தொழிற்சாலை அமைக்கத் தகுதி வாய்ந்த இடமென்றும் கூறப்படுகிறது; இறுதி முடிவு இன்னும் செய்யப்படவில்லை.

ஆரம்ப காலத்தில், இத்தொழில், 4,000 பேர்களுக்கு வேலை கொடுக்கும் என்று தெரிகிறது.

ஆண்டுதோறும், பெட்ரோல், டீசல் போன்ற எண்ணெய் வகைகளை சுமார் 4,00,000 டன்கள் வரை, இலங்கை இறக்குமதி செய்கிறது என்று கூறலாம்.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு:

அடுத்த பிப்ரவரியில் நடைபெறும்

டாக்டர் சுகர்னோ அறிவிப்பு

"ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடொன்று அடுத்த பிப்ரவரி மாதத்தில் மேற்கு ஜாவா தலைநகரான 'பாண்டங்' எனுமிடத்தில் நடைபெறலாம்,'' என்று, இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் சுகர்னோ குறிப்பிட்டிருக்கிருர்.

சுமத்திராவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்த ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு நடைபெறுவதற்கு முன்னுல், கொழும்பு நாடுகளின் கூட்டமொன்று வருகிற டிசம்பரில், ஜகார்தாவிலிருந்து 40 மைல் தொலைவிலிருக்கும் போகார் எனும் இடத்தில் நடைபெறும்.

"காலனிக் கொள்கையையும், ஏகாதிபத்தியத்தையும் அழித்தொழிப்பதற்கு உதவக்கூடியனவாகவும், ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே உள்ள தொடர்பையும் உறவையும் வலுப்படுத்துவதற்கும், இந்த ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு பயன்பட முடியும்.''

இந்த மாநாடுகளில் கலந்து கொள்ளுமாறு, ஆசியா, ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய 14 நாடுகள் அழைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாநாடு, ஆசியா - ஆப்பிரிக்கா ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும், சர்வதேச நிலைகள் குறித்தும் விவாதம் நடத்தும்.

கோவில்பூசாரிவீட்டில் கொள்ளை!

பத்தாயிரம் பெறுமான சொத்து பறிபோயிற்ரும்!

அவை வந்த வழியே செல்கின்றனவோ!

தேவ்கார், அக். 27—

தேவ்காருக்கு வடபகுதியிலுள்ள கோபாலபுரத்தில் வசிக்கும் பணக்காரப் பூசாரி ஒருவருடைய வீட்டில் கொள்ளைக் கூட்டத்தினர் நுழைந்து, அவ்வீட்டிலிருந்தவர்களில் மூன்று பேரைப் பலமாகத் தாக்கிவிட்டு, அங்கிருந்த சுமார் ரூ. 10,000 பெறுமானமுள்ள நகைகளுடன் ஓடிவிட்டனராம்! வீட்டிலிருந்த பெண் ஒருவர் மிகக் கொடூரமாக இம்சிக்கப்பட்டாராம்.

இந்தக் கொள்ளைச் சம்பவம், ஒரே வாரத்தில் அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் நடைபெற்ற இரண்டாவது துணிகரக் கொள்ளையாகும்.

இந்தச் சம்பவத்தை யொட்டி தேவ்காரின் தெற்குப் பகுதிகளில் பலத்த போலீஸ் காவல்கள் வைக்கப்பட்டுள்ளனவாம்!

தம்பியைக் காணுது தவிப்பு!

ஈரான் மன்னர் துயரம்

தெஹ்ரான், அக். 29—

ஈரான் மன்னரின் தம்பியும், அடுத்த பட்டத்துக்குரியவருமான அலி ரீஜா என்பவர் காணப்படவில்லையாம். அவர் ஏறிச் சென்ற விமானம் எங்கு சென்றது என்பதும் தெரியவில்லையாம். தம்பியைக் காணுத துயரத்தால், தனது பிறந்த நாள் விழாவை மன்னர் ஷா ரத்து செய்துகொண்டாராம்!

ரீஜாவைக் கண்டுபிடிக்கச் சென்ற விமானங்கள், அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் தோல்வியுற்றுத் திரும்பினவாம்!

தாலுகாவிற்கு ஒரு மருத்துவ விடுதி!

"அடுத்த ஆகஸ்டு மாதத்திற்குள் சென்னை மாநிலத்தின் ஒவ்வொரு தாலுகாவிலும் மருத்துவ நிலையங்கள், குழந்தைகள் பரிபாலன நிலையங்கள் ஆகியவை சர்க்கார், க்ஷேம நல விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும்,''

என்று, சென்னை முதன் மந்திரி காமராசர், குடியாத்தம் அருகிலுள்ள சோளமர் எனும் இடத்தில் குழந்தைகள் பரிபாலன நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஈரான் எண்ணெய் ஒப்பந்தம்

பாரசீகப் பாராளுமன்றம் ஒப்புக்கொண்டது

ஈரான் பாராளு மன்ற மேல் சபையான செனெட், ஈரான் எண்ணெய் ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டது.

கீழ்சபையான மஜ்லிசில் இந்த ஒப்பந்தம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது நினைவில் இருக்கலாம்.

அடுத்து ஈரான் மன்னரான ஷாவின் கையெழுத்தைப் பெற வேண்டியதுதான் பாக்கியாகும்.

ஈரான் எண்ணெய்த் தொழிலை தேசீய மயமாக்க வேண்டும் என்ற பிரச்சினையில் சென்ற மூன்ருண்டுகளாக எண்ணெய்க் கிணறுகள் வேலை செய்யாது உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அவைகளில், வருகிற சனிக்கிழமையன்று மீண்டும் வேலை துவங்கப்படும்.

பாரசீக வளைகுடாவில் உள்ள சில எண்ணெய்க் கப்பல்கள், அபேடான், பந்தர் மாஷ்பூர் துறைமுகங்களுக்குச் செல்லத் தயாராகின்றன.

மீண்டும் எண்ணெய்க் கிணறுகளில் வேலை துவங்குவதை முன்னிட்டு நடைபெறும் நிகழ்ச்சியில் ஈரான் நிதி அமைச்சரும், எண்ணெய்க் கம்பெனியின் தலைவரும் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

1955 ஜனவரித் திங்களில் எண்ணெய்க் கிணறுகள், முன்போல் முழு அளவில் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் எண்ணெய்க் கப்பல்களுக்குத் தீ வைக்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 12 பேருக்கும் மரண தண்டனை அளிக்க வேண்டும் என்று சர்க்கார் தரப்பில் இராணுவ நீதி மன்றத்தில் கோரப்படுகிறது.

இப்போது ஏற்பட்டுள்ள எண்ணெய் ஒப்பந்தப்படி, பாரசீக சர்க்கார், அமெரிக்கா, ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கம்பெனிகள் கூட்டாக 40 ஆண்டு காலத்திற்கு எண்யெய்க் கிணறுகளை நிர்வகிக்கும்.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் பாரசீகம், ஆண்டு ஒன்றுக்கு 32 மில்லியன் டன் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் என்று தெரிகிறது.

பத்திரிகாசிரியர்களின் உரிமைகள்!

பிரிட்டன் பத்திரிகை கவுன்சிலின் முடிவு!

"ஒரு நீதிமன்றமோ அல்லது மக்கள் சபையோ உத்திரவிட்டாலன்றி, செய்திகள் தங்களுக்குக்கிடைக்கும் வழிகளை வெளிடாமலிருக்கிற உரிமை பத்திரிகாசிரியர்களுக்குக் கட்டாயமாக இருக்க வேண்டும்,''

என்று பிரிட்டனின் பத்திரிகைக் கவுன்சில் தனது சமீபத்திய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அந்தக் கவுன்சில், பத்திரிகையாளர்களாலேயே நிறுவப்பட்டிருப்பதாகும். அதற்கு எந்தவிதமான அதிகாரங்களும் கிடையாது. ஆனுல், பத்திரிகைத் தொழில் சம்பந்தப்பட்ட புகார்களை மட்டும் விசாரித்து வருகிறது.

கவுன்சில் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

1. பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் பற்றிய தஸ்தாவேஜுகள், 'தனிப்பட்டவை—ரகசியமானவை' என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவற்றையும் பிரசுரிக்கிற உரிமை பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டும்.

2. ஒரு பத்திரிகை ஆசிரியர் விரும்பினுல், எந்த ஒரு வகையான விளம்பரத்தையும் நிராகரிக்கிற உரிமையும் வேண்டும்.

3. யாரிடமும் கொண்டுள்ள ஆசிரியர் கடிதப் போக்குவரத்தை தான் விரும்பாவிடின், நிறுத்திக் கொள்கிற முழு உரிமையும் ஒரு பத்திரிகாசிரியருக்கு உண்டு.

இந்த முடிவுகள் எல்லாம் சில குறிப்பிட்ட தகராறுகள் எழுந்த பின் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பூலி நகர மார்க்கெட்டில் பணியாற்றும் குமாஸ்தா ஒருவர், 'இரகசியமானது' என்று கருதப்பட்ட செய்தி யொன்றை உள்ளூர் பத்திரிகையொன்று பிரசுரித்திருந்தாயும், அச்செய்தி எங்கிருந்து கிடைத்ததென ஆசிரியர் சொல்ல மறுத்து விட்டதாயும் புகார் செய்திருந்தார்.

'டைபோகிராபிகல் அசோசியேஷன்' என்ற ஒரு கம்பெனி, தாங்கள் தந்திருந்த விளம்பரம் ஒன்றை பிரசுரிக்க லங்காஷயர் பத்திரிகை ஒன்று மறுத்துவிட்டதாகப் புகார் செய்தது.

தங்களைத் தாக்கி வெளிவந்திருந்த கடிதம் ஒன்றிற்குப் பதில் எழுதி அனுப்பியதைப் பிரசுரிக்காமலேயே, கடிதப் பிரசுரத்தை 'டைம்ஸ்' என்ற இதழ் நிறுத்தி விட்டதாக, 'சமாதான உறுதி மொழி சங்க'த்தின் பொதுச் செயலாளர் புகார் செய்திருந்தார்.

இந்த மூன்று புகார்களின் அடிப்படையில் தான் மேற்கண்ட பத்திரிகாசிரியர்களின் உரிமை பற்றிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

சோதனை!

டையூவின் அருகே செல்லும் எல்லா இந்தியக் கப்பல்களையும், சோதனையிடுவதற்காக 24 மணி நேரம் நிறுத்திவைக்கும்படி டையூ கவர்னர் உத்திரவு பிறப்பித்திருக்கிருர்.

ரயிலில் பிறர் உட்காரும் இடத்தில் காலை வைத்து அசுத்தம் செய்தவர்

2 பவுன் அபராதம் விதிக்கப்பட்டார்

பிலிப் ஆண்ட்ரூ டான்னெல்லன் என்ற 30 வயதுடைய பி.பி.சி. தயாரிப்பாளர் பர்மிங்காமிலிருந்து லீமிங்டன் என்ற இடத்திற்குச் செல்லும் ரயில் வண்டியில் பிரயாணம் செய்தார். அவருடன் ஆர்தர் ஜேம்ஸ் என்ற ஒரு ரயில்வே ஊழியரும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

டான்னெல்லன் தனக்கு எதிரேயிருந்த ஆசனத்தின் மீது காலை வைத்துக்கொண்டு ஏதோ படிக்க ஆரம்பித்தார். பிறர் உட்காருகிற இடத்தில் இப்படி காலை வைத்து அசுத்தம் செய்யக்கூடாது என்று தன்னுடன் பிரயாணம் செய்தவரின் சொல் அவர் காதில் விழவே இல்லை.

ரயில் வண்டியின் 'கார்டு,' ரயில் நிலைய நீதிபதியிடம் இது பற்றி புகார் செய்தார்.

ரயில் வண்டி பரிசோதகர் சாட்சியமளிக்கையில் டான்னெல்லன் கால்வைத்த இடத்தில் அடையாளங்களிருந்தன வென்றும், அவர் செய்த அசுத்தத்தை, தான் சுத்தி செய்ததாகவும் கூறினுர்.

ஆனுல், டான்னெல்லன், தான் ஞாபக மறதியாக கால்களை எதிர் ஆசனத்தில் வைத்ததாகவும், இடத்தை அசுத்தப்படுத்தவில்லை என்றும், இடத்தில் செருப்புப் பட்டதற்கான அடையாளங்கள் இல்லையெனவும், எனவே, தான் குற்றமற்றவர் என்றும் வாதாடினுர்.

நீதிபதி, அவர் செய்தது சட்டப்படி தவறென்று கூறி அவருக்கு 2 பவுன் அபராதமும், 13 ஷில்லிங் செலவு தொகையும் கட்டுமாறு உத்தரவிட்டார்.

இந்திய சோப்புத் தொழில்

டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கூறும் யோசனை

"இந்திய சோப்பு உற்பத்தித் தொழிலை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து காப்பாற்றுவதற்கு வெளிநாட்டுக் கம்பெனிகள் சோப்பு உற்பத்தியில் சுமார் 2000 டன் அளவை மூன்று வருட காலத்தில் குறைக்கவேண்டும்; எங்கெங்கு இந்தியாவில் சோப்பு உற்பத்தியாகிறதோ அங்கெல்லாம் அந்த அளவு சோப்பு உற்பத்தியை படிப்படியாக உயர்த்த வேண்டும்.''என்று டாக்டர் விஸ்வேஸ்வரய்யா, பெங்களூர் ராஜாஜி நகரில் உள்ள சோப்புத் தொழிற்சாலை ஒன்றிற்கான புதிய கட்டிடத்திற்கு கால்கோல் விழாவை நடத்துகையில் குறிப்பிட்டார்.

ஆந்திராவில் புதிய வரிகள்

விற்பனை வரி உயர்வு; நிலவரியின் மீது உபரி வரி விதிப்பு

ரூ. 3 கோடி துண்டு விழுவதை ஈடு கட்ட முயற்சி

கர்நூல், அக். 29—

ஆந்திர சட்டசபையின் இரண்டாவது கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கவர்னர் திருவேதி, குறைந்த அளவில் நிலவரி கொடுப்போருக்கு சர்க்கார் அளித்துள்ள வரி விலக்கினுல் ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்டவும், பொதுவாக வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி உண்டாகிற பற்ருக்குறையைச் சரிக்கட்டவும் புதிய வரிகளை சர்க்கார் விதிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் ரூ. 2,99,00,000 துண்டு விழும் என்று முன்னர் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையினுல் மேலும் சுமார் ரூ. 1,30,00,000 சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவைகளுக்காக ஆந்திர சர்க்கார், விற்பனை வரி உயர்வு, சில வகைப் பொருள்களில் விற்பனை வரியை வாங்கும் வரியாக மாற்றுவது நில வரியின் மீது உபரி வரி விதிப்பது—ஆகிய இம் முறைகளை கடைப்பிடிப்பார்கள் என்று தெரிகிறது.

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற புதுவை நிகழ்ச்சி

பிரெஞ்சு ஆதிக்கம் வடவர்கைக்கு மாறுகிறது!

பிரெஞ்சிந்திய மக்கட்கு பிடி தளர்த்தும் ஏகாதிபத்தியத்தின் ஆசி!

புதுவை, நவ. 1—

திராவிடத்தின் கிழக்குக் கடற்கரையிலுள்ள புதுவை, காரைக்கால், ஏனம் ஆகிய பகுதிகளும், மேற்குக் கடற்கரையிலுள்ள மாகியும் கடந்த 250 ஆண்டுகளாகப் பிரெஞ்சுக்காரர்களின் பிடியில் சிக்கியிருந்தவை—இன்று அந்த ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு விட்டன.

திராவிடத்தை, அதிகாரத்தால் அணைத்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிற .இந்தியப் பேரரசு, அப்பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பை இன்று முதல் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தியப் பேரரசு நியமித்திருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலான திரு. பாலகிருஷ்ண மேனன் போலீஸ் நிலையங்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். பிரெஞ்சுப் பகுதிகளின் கமிஷனராயிருந்த எம். எஸ்கர்கெல் என்பவரிடமிருந்து நிர்வாகப் பொறுப்பு முழுதும் இந்திய அதிகாரிகளின் கைக்கு மாற்றப்பட்டுவிட்டன.

அந்தப் பிரெஞ்சு அதிகாரியும், அவரது சகாக்களும் நேற்றே பாரிஸ் செல்லுவதற்காக சென்னைக்குப் புறப்பட்டு விட்டனர்.

காற்றில் ஆடிப் பறந்து ஆதிக்க முத்திரையாகக் காட்சி தந்துகொண்டிருந்த பிரெஞ்சுக் கொடி, நேற்று மாலை இறுதியாகக் கம்பத்தினின்றும் இறக்கப்பட்டது.

பிரெஞ்சுக் கமிஷனர் புதுவையை விட்டுப் புறப்படுகையில், "பிரெஞ்சிந்திய மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து வெளியேறுகிறோம்; அவர்கள் வளம் எல்லாம் பெற்று வாழ்க!" என்று வாழ்த்தி, இந்தியக் கமிஷனரான கேவல்சிங்குடன் கை குலுக்கிவிட்டு, தனது வெளியேறும் பயணத்தைத் துவக்கினார்.

பிரெஞ்சிந்திய மக்கள் இன்று, 'விடுதலை' விழாக் கொண்டாடுகின்றனர். அவர்களுக்கும் தெரியத்தான் செய்யும்—'தங்களை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர் வெளியேறுகின்றனர்; இந்திய ஆதிபத்தியம் ஆளப் புறப்பட்டிருக்கிறது'—என்ற உண்மை.

★

சரித்திரக் குறிப்புகள்

1674 : பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் புதுவையில் பிராங்கோ மார்டின் என்பவரால் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது.

1693 : டச்சுக்காரர்களால்புதுவை கைப்பற்றப்பட்டது.

1699 : 'ரிஸ்விக்' சமாதானப்படி, மீண்டும் புதுவை பிரெஞ்சுக்காரர் வசமாக்கப்பட்டது.

1721 : படகாரா மன்னரிடமிருந்து மாகி, பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

1731 : பிரெஞ்சுக்கார 'அரசு' ஏனமில் நிறுவப்பட்டது.

1761 : புதுவை வெள்ளையர் வசமாயிற்று.

1765 : மீண்டும், புதுவை பிரெஞ்சுக்காரர் வசமாகியது.

1778 : திரும்பவும் ஹெக்டர் மன்ரோ என்பவரால், புதுவை வெள்ளைக்காரர் வசமாக்கப்பட்டது.

1785 : வார்சேல்ஸ் உடன்படிக்கையின்படி, புதுவை மீண்டும் பிரெஞ்சுக்காரர்களுக்குத் தரப்பட்டது.

1793 : பிரெய்த்வெய்ட் என்ற வெள்ளைக்காரரால், பிரெஞ்சுக்காரரிடமிருந்து புதுவை பறிக்கப்பட்டது.

1816 : பாரிஸ் உடன்படிக்கையின்படி, மீண்டும் புதுவை பிரெஞ்சுக்காரருக்குக் கிடைத்தது; ஆனால், 'அங்கு எவ்வித இராணுவ தளமும் அமைக்கக் கூடாது; சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் போதுமான துருப்புகளை மட்டுமே அங்கு வைத்திருக்கவேண்டும்,' எனும் நிபந்தனையும் பாரிஸ் உடன்படிக்கையின்படி ஏற்பட்டது.

15-2-1941 : இந்திய அரசாங்கமும், பிரெஞ்சிந்திய அரசாங்கமும், சுங்க வரிக்கான ஒப்பந்தம் செய்துகொண்டன.

6-1-1947 : பிரெஞ்சிந்தியப்பகுதிகளில், மக்களின் பிரதிநிதித்துவ சபை தோற்றம்.

15-8-1947 : இந்தியா 'விடுதலை' பெற்றது—பிரெஞ்சிந்திய மக்கள், இந்தியாவுடன் இணைய வேண்டுமென ஏகக் குரல் எழுப்பினர்.

ஆக. 1947 : காந்தியாரை கவர்னர் பாரன், கல்கத்தாவில் சந்தித்துப் பேசினார்; காந்தியார், புதுவை மக்களை அமைதியாக இருக்கும்படி வேண்டினார்.

8-6-1948 : இந்தியாவில் தங்கள் அரசியல் அந்தஸ்தை நிர்ணயித்துக் கொள்ளுமாறு பிரெஞ்சுக்காரர்கள், இந்தியா-பிரான்ஸ் ஒப்பந்தப்படி புதுவை மக்களுக்கு, 'விடுதலை' வழங்கினர்.

24-10-48 : பிரெஞ்சிந்தியத் திட்டுக்கள் நான்கிலும், நகரசபைத் தேர்தல் நடைபெற்றது.

21 முதல் 23-10-48 வரை : மாகியில் புரட்சி; இணைப்புக் கிளர்ச்சிக்காரர்களால் மாகி கைப்பற்றப்பட்டது.

29-10-48 : மாகி மீண்டும், பிரெஞ்சு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

டிசம்பர் 1948 : ஜெய்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அந்நிய ஆதிக்கத்தில் உள்ள திட்டுக்கள் தாயகத்துடன் சேர வேண்டுமென்ற தீர்மானம்.

21-3-1949 : 11-12-49-ல், வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென புதுவை நகரசபைகள் தீர்மானிக்கின்றன.

1-4-1949 : 1947-ல் செய்யப்பட்ட சுங்க ஒப்பந்தம் ரத்தாகி, 'பாஸ் போர்ட்' முறை அமுலுக்கு வந்தது.

19-6-1949 : சந்திரநாகூர், இந்தியாவுடன் இணைய முடிவு செய்கிறது.

27-7-1949 : சோஷலிஸ்டு கட்சி, நகரசபை அங்கத்தினர்கள், பிரதிநிதித்துவ சபை ஆகிய பிரதிநிதிகள் அடங்கிய பிரெஞ்சிந்திய தூதுக் குழு, இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்தது.

17, 18-10-1949 : புதுவை நகரசபைகள் நான்கும், வாக்கெடுப்பின்றியே இந்தியாவுடன் இணைய வேண்டுமென தீர்மானிக்கின்றன.

2-5-1950 : சந்திரநாகூர் நிர்வாகத்தை இந்திய அரசாங்கம் ஏற்கிறது.

2-2-1951 : சந்திரநாகூர், இந்தியாவுடன் பூரணமாக இணைவதற்கான ஒப்பந்தம், பாரிஸ் நகரில் கையெழுத்தாயிற்று.

மார்ச், ஏப்ரல் 1951, பிரெஞ்சிந்திய மக்கள் சுதந்திரமாக தங்கள் கருத்தறிவிப்பதில் உள்ள இடையூறுகள் பற்றி நடுநிலைக் குழு ஒன்று ஆராய்ந்தறிந்து அறிவித்தது.

டிசம்பர் 1951 : திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாட்டில், பிரெஞ்சிந்தியப் பகுதிகள் விடுதலை பெற வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

9-6-54 : சந்திரநாகூர், பூரண விடுதலைபெற்று இந்தியாவுடன் இணைந்தது.

மார்ச் 1954 : பிரெஞ்சிந்தியாவில் உள்ள எல்லா நகரசபை உறுப்பினர்களும், 'மேயர்'களும் பிரெஞ்சிந்திய விடுதலை கோரி முழக்கம்.

27-3-54 : புதுவை எழுச்சி குறித்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற அறிக்கை.

23-3-54. நெட்டப்பாக்கம், மதுக்கரைப் பகுதிகள்விடுதலைப் படையினரால் விடுக்கப்பட்டன.

8-5-54 : மாகி விடுவிக்கப்பட்டது.

16-5-54 ; விடுவிக்கப்பட்ட பகுதிகளின் பிரதிநிதிகள் மாநாடு, பிரெஞ்சிந்திய விடுதலை அரசாங்கத்தை நிறுவியது.

ஜூன் 1954 : பாரிசில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வி.

13-6-54 : ஏனம் விடுதலை.

இந்த விடுதலைப் போரில் தொடர்ந்து புதுவை தி. மு. கழகத் தோழர்கள் பெரும் பங்கு பெற்றனர்.

13-10-54 : பிரான்சு, இந்திய அரசாங்கங்கள், விடுதலை குறித்து கூட்டறிக்கை வெளியிட்டன.

17-10-54 : மதுக்கரையில்பிரெஞ்சிந்திய மக்கள் சபையின் பிரதிநிதிகள், கவுன்சிலர்கள் மாநாடு.

18-10-54 : பிரதிநிதித்துவ சபையின் உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள் எல்லோரும், கீழூரில் கூடி, பெருவாரியான வாக்குகளால் பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இந்தியாவுடன் இணைய வேண்டுமென முடிவெடுத்தனா.

21-10-54 : புதுடில்லியில் அதிகார மாற்றத்திற்கான ஒப்பந்தம்.

1-11-54 : பிரெஞ்சுக்காரர்கள் வெளியேற்றம்—நிர்வாகம் இந்தியப் பேரரசின் கைக்கு மாறிற்று.

கழகக் கூட்டம்

வாளவாடி

3—11—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர் :

கே. ஏ. மதியழகன்

பி. நாராயணன்

திருக்குறள் வகுப்பு

2—11—54 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் 'இனியவை கூறல்' என்பதுபற்றி தோழர் மயிலை. சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்.

புதிய வாழ்வல்ல; புதிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வில் புதிய நிலையேயல்லாது—புதுவாழ்வு அல்ல—முக்காலும் அல்ல!

புதுவாழ்வு பெரும் போரின் விளைவு—அந்தப் போருக்கு, இன்று ஏற்படும் அதிகாரமாற்றம் வித்திடுகிறது. விடுதலை—ஒரு தொடர் கதை; சிறு கதையாகச் சுருக்கப் பார்ப்பது தோல்வியுறும் என வரலாறு, வலியுறுத்துகிறது!

தாளாற்றித்தந்த பொருளுக்குத்தான் மதிப்புண்டு—கள்வர் கவர்ந்து செல்லாவண்ணம் காக்க வேண்டுமே என்ற கவலையும் உண்டு!

தான்தேடா பொருளுக்கு உரையுமில்லை மாற்றுமில்லை என்பது முதுமொழி. பிரெஞ்சிந்திய விடுதலை மக்கள் தேடிப் பெற்றது—தியாகங்கள் பல புரிந்து பெற்றது நினைத்தமாத்திரத்தில் நாடிப் பெற்றது அல்ல! எனவே, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை விரட்ட அம்மக்கள் காட்டிய வீரம், ஆதிக்கபுரியினிடமிருந்து நாட்டை மீட்க உதவாமல் போகாது—உருவாகி உரம் பெருமலும் இருக்காது! ஏகாதிபத்தியத்தை வெளியேற்றும் முதற் போரில், வெற்றி கண்ட சோதர திராவிடர்களை மனமார வாழ்த்துகிறோம் பாராட்டுகிறோம்! அடுத்த போருக்குத் தம்மைத் தயாரித்துக் கொண்டால்தான், பெற்ற புதிய நிலை சோகம் நிறைந்த கேலிக் கூத்தாக மாறிவிடாது தடுத்துக் கொள்ள முடியும்!

நல்வாழ்வு, மக்களாட்சியில் காய்க்கும் மதுர கனி! மக்களாட்சி மலருவதற்கு, மக்களிடம் காணப் பெறும் அரசியல் விழிப்புத்தான் அருமருந்து!

விழிப்பு விரட்டப்பட்டு, உறக்கம் குடி புகுந்தால், 'கொடுங்கோலன் வாழும் நாட்டிலும் கொடும் புலி வாழும் காடு மேல்' என்ற அவல நிலை நாட்டில் நடமாடத் தொடங்கும்! மக்களாட்சி மாயும்! மக்கள் நல்ல வாழ்வு மந்தி கை மலராகும்! ஆதிக்க புரியினர் அட்டகாசம் புரிவர்! அதற்கு இடங் கொடுக்கக்கூடாது; 'பிரெஞ்சிந்திய' மக்கள் — இடம் கொடுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை நமக்குண்டு!

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு முடிவுகட்டிய மக்களை மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்! இந்த உயர் நிலை காண, உயிர்துறந்த உத்தமர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறோம்!

பர்லாகிமிடியில் ஊரடங்குச் சட்டம்!

250 பேர் கைது

சென்ற வியாழனன்று பர்லாகிமிடியில் ஆந்திரர்களுக்கும்—ஒரிய மக்களுக்குமிடையே நடைபெற்ற கலவரத்தையொட்டி அப்பகுதியில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சத்ரபூர் மாவட்ட கலெக்டர், பர்காம்பூர் மாவட்ட உதவி கலெக்டர் ஆகியோர் கலவரம் நடைபெற்ற இடத்தில் முகாம் போட்டிருக்கின்றனர்.

ஆந்திராவின் உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனரல், மாவட்ட போலீஸ் அதிகாரி, ஸ்ரீகாகுளம் மாவட்ட கலெக்டர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச சென்றுள்ளனர்.

பர்லாகிமிடியில் போலீசார் இது வரை 250 பேர்களைக் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

பர்லாகிமிடியில் வாழும் ஆந்திர மக்கள், பயமேலீட்டினால், நகரை விட்டு வெளியேறி, பத்தபட்டணம் போன்ற வேறு இடங்களுக்குச் செல்கின்றனர் என்று தெரிகிறது.

தமிழ் நாடு காங்கிரஸ்

உறுப்பினர்களிடை பலத்த போட்டி!

கோவை, அக். 31—

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு கோவை மாவட்டத்திலிருந்து 33 இடங்கள் உண்டு. அந்த 33 இடங்களுக்கும் 99 காங்கிரஸ்காரர்கள் போட்டியிடுகின்றனர் எனத் தெரிகிறது.

அதேபோல சேலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 27 இடங்களுக்கு 90 பேர் போட்டியிடுகின்றனர் எனத் தெரிகிறது. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், ஆவடியில் வருகிற ஜனவரியில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வார்கள் எனத் தெரிகிறது.

திரு. பாலசுப்ரமணியம் மறைவு

புதுச்சேரி, அக். 31—

பிரெஞ்சிந்திய மக்கள் பிரதிநிதித்துவ சபையின் தலைவரான திரு. பாலசுப்பிரமணியம் இன்று காலையில் இயற்கையெய்தினர்.

இந்த சோகச் செய்தி கேட்ட புதுவை மக்கள் துயரத்திலாழ்ந்தனர்.

இந்தியாவுடன், பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இணைவது என்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற முடிவை, கடந்த 18-ந் தேதியன்று நடைபெற்ற கீழூர் காங்கிரஸ் கூட்டத்திற்கு திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள்தான் தலைமை தாங்கினர்.

நவம்பர் 1-ல் அதிகார மாற்றம் நடைபெறுமுன் இச்சம்பவம் நிகழ்ந்தது பெரும் வருத்தத்திற்குரியதாகும்.

அவருக்கு வயது 61 ஆகிறது.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், இந்தியத் தூதுவராலயத்தில் பறந்த இந்திய தேசீயக் கொடியும், சர்க்கார் கட்டிடங்களில் பறந்துகொண்டிருந்த பிரெஞ்சு கொடிகளும் தாழப் பறக்கவிடப்பட்டன.

அவரது மறைவு குறித்து நாமும் வருந்துவதுடன், அவரது சேவையை இழந்துவிட்ட புதுவை மக்களுக்கும், அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபம் உரித்தாகுக.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.